# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)



**காவலன்**

சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | ,, | 4-50 |
| 3 மாத | ,, | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)



95-ம் புத். | 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 19-ம் இல.


# டக்றர் வில்லியம் கூவ்ற் அவர்களது இலங்கைவிஜயம்

கிறீஸ்தசபைகள் பலவற்றினதும் ஒற்றுமைக்காக உழைத்துவரும் பெரியாருள் டக்டர் வில்லியம் கூவ்ற் அவர்களும் ஒருவர். காலஞ்சென்ற ஒற்றுமைக் கருதினால் பியா அடிகளாருடன் இந்நோக்கத்துக்காகத் தம்மைச் செலவு செய்தவர். இவர் அண்மையில் இலங்கைக்கு வந்திருக்கிறார். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமையைப் பற்றியும், கிறீஸ்தவர்களின் சேவையைப்பற்றியும் தாம்உணர்வதைப் பிறருக்கு ஊட்டி வருகின்றார். போகுமிடங்களில் எல்லாம் கிறீஸ்தவர்கள் தம் நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் கண்ணும் கருத்தும் உடையவர்களாக இருக்கவேண்டுமென்றும் பிறர்சிநேகமின்றித் தேவசிநேகம் இருக்கமுடியாதென்றும் போதித்துவருகின்றார். கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமை இயக்கம் 23-ம்பத்திநாதை பாப்பரசரின் முயற்சிகளின்பின் கத்தோலிக்கரை மறு கிறீஸ்தவசபைகளுடன் இறுகப் பிணித்துள்ளது என்றும் அன்றுமுதல் கத்தோலிக்கர் இப்பாதையில் முன்னேறிச் செல்வதை இலங்கை உட்பட உலகின் எல்லாப் பாகங்களிலும் கண்டுவருகின்றோம் என்றும் பெரிதும் சந்தோஷத்துடன் இவர் எடுத்துக்காட்டுகின்றார்.

## ஆங்கில வேதசாட்சிகள் நாற்பதின்மரின் அர்ச்சியசிஷ்ட பட்டம்

திருச்சபையில் அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்குமுன் பலவித விசாரணைகள் நடந்தேறவேண்டும். இதற்கென வத்திக்கானில் பாப்பரசரால் நியமிக்கப்பட்ட விற்பன்னர்குழு இருக்கின்றது. இக்குழுவினர் சட்டதிட்டங்களின்படி விசாரணைகள் நடத்தி, அர்ச்சியசிஷ்டபட்டத்துக்கு அத்தாட்சிப்படுத்தப்படவேண்டிய புதுமைகள் உண்மையென உறுதி அளிக்கவேண்டும். ஆங்கில நாட்டின் 40வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டமளிப்பதற்கு ஆகவேண்டிய சோதனைகள் அத்தாட்சிகள் யாவும் முடிவடைந்துவிட்டன. சென்றவாரம் பாப்பரசரது முன்னிலையில் புதுமைகளின் அத்தாட்சிகள் வாசித்து நிறைவேற்றப்பட்டன. பரிசுத்த தந்தை அளிக்கத் தேவைப்படும் இறுதியான அனுமதியை அளிக்க கருதினால் குழுவினரை இம்மாதம் 18-ம்திகதி கூடுமாறு கட்டளைபண்ணியிருக்கிறார்.

## கலப்புவிவாக சட்ட திருத்தங்களின் முக்கிய அம்சம்

கலப்பு விவாக சட்டங்களில் சில திருத்தங்களைப் பரிசுத்த தந்தை அனுமதித்திருப்பதை சென்ற வாரம் அறிவித்திருந்தோம். இத்திருத்தங்களுக்கு முக்கிய அடிப்படையாய் இருப்பது விவாகத்தில் பங்குபெறும் கத்தோலிக்கரல்லாத பாலாரின் மனச்சாட்சிக்கு எதிராக நிபந்தனைகள் பெறாதிருப்பதே. கத்தோலிக்கராயிருக்கும் ஆணோ, பெண்ணோ தம்புத்திர புத்திரிகளைக் கத்தோலிக்க முறைப்படி வளர்த்துவரவேண்டிய கடமைகளில் ஒன்றும் தளரவிடப்படவில்லை. ஆகவே, புதிய திருத்தங்கள் விவாகத்தில் கத்தோலிக்கராயிருக்கும் பாலாருடைய கடமைகளை முன்போல வற்புறுத்துவதுடன் கத்தோலிக்கரல்லாத பாலாரை தம்பதிகளுக்கு நியாயமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது.

## பாப்புவின் வேண்டுகோள்

சென்றவாரம் பிரான்சு தேசத்திலிருந்து வத்திக்கான்சென்ற தாயகுடும்ப வாழ்க்கைச் சங்கத்தினரின் பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டியில் பரிசுத்ததந்தை உலகமக்களுக்குத் திருச்சபையின் விவாக சட்டங்களின் சிறப்பை எடுத்துக்காட்டி அச்சட்டங்கள் கடுமையானவையாகத் தோன்றின் திருச்சபைக்கு எதிராகப்புரட்சி செய்யாதிருக்கக் கேட்டுக்கொண்டார்; அச்சட்டங்களைத் திருத்தமாக அனுசரிக்கத் தேவனது அனுக்கிரகம் வேண்டுமென்றும் அதற்காக நாம் செபித்தால் கிடைக்குமென்றும் மனச்சோர்வு கொள்ளாது விடாப்பிடியாய்ச் செபித்து பாவசங்கீர்த்தனத்தின் மூலம் பரிசுத்த தனத்தில் முன்னேறவும் கேட்டுக்கொண்டார்.

## றொடிசியா பிரதமர் தன் பிழையை உணர்ந்துகொண்டாரா?

றொடிசியாதேசப் பிரதமர் அத்துமீறி இனஒதுக்கம் செய்துவரும் முறையை அத்தேச கத்தோலிக்க மேற்றிராணிமார் பகிரங்கமாகக் கண்டித்து, பிரதமரைக் காணத் தாம் தயாராய் இருப்பதாக அவருக்கு அறிவித்திருந்ததாக அறிவித்திருந்தோமல்லவா? பிரதமருடைய அநீதியான சட்டங்களுக்கு அமைவதாயின் தாம் இப்போது செய்துவரும் சமூகத் தொண்டுகள் பலவற்றைக் கைவிடவேண்டி வருமென அவர்கள் கூறியிருந்ததைக் கேள்விப்பட்ட பிரதமர் திகில் கொண்டவராய் அத்தேச அதிமேற்றிராணியாருடன் சமரசம் பேசுவதற்காக அவரை அழைத்திருந்தார். இச்சந்திப்பின் பலாபலனை இன்னும் சில வாரங்களில் அறிந்துகொள்ளலாம். றொடிசியா தன் இனவெறியைத் தென்ஆபிரிக்க பிரதேசத்திலிருந்து கற்றுக்கொண்டதை யாவரும் அறிவர். தென்ஆபிரிக்காவின் இனவேறு உலகிலே உள்ள பெரும்பாலான தேசங்களுடன் தொடர்பு அற்ற நிலைக்கு அத்தேசத்தைக் கொண்டு வந்திருக்கின்றது.

## செக்கோசிலவாக்கியாவில் மீளவும் திருச்சபைக்குக் கஷ்டகாலமா?

1968-ம் ஆண்டு செக்கோசிலாவாகியாவில் திரு டுபெக் கொமியூனிஸ்த கட்சியின் பொதுக்காரியதரிசியாய் இருந்தபோது கத்தோலிக்கருடன் அரசாங்கம் நியாயமான தன்மையில் நடந்துகொள்ளவிருப்பமுடைய அறிகுறிகள் தோன்றின. ஆனால், திரு. டுபெக் பதவியிலிருந்து அகற்றப்பட்டு மீளவும் தீவிரவாதிகள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்ததன் பின் நிலைபரம் விரைவாக முன்போல கஷ்டமானதாகிவிட்டது: அரசாங்கம் கத்தோலிக்கரில் ஐயுறவான கண்களுடனேயே இருக்கின்றது. எனினும் கத்தோலிக்கரிடையில் ஒற்றுமை குறையவில்லை. சென்றவருடம் புள்ளிவிபரங்களிலிருந்து கத்தோலிக்க பத்திரிகையின் விற்பனவு கூடிக்கொண்டே வருகின்றது. அதேபொழுது அரசாங்க கொமியூனிஸ்த கட்சிப்பத்திரிகையின் விற்பனை குறைந்து வருகின்றதாம்.

## யாழ்நகர டச்சுக்கால தேவாலயம் புதுப்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒல்லாந்தர் காலத்தில் மகாகீர்த்தியுடன் விளங்கிவந்ததும், பின்காலங்களில் உபயோகிக்கப்படாது பழுதடைந்தநிலையில் பலவருடகாலமாக இருந்ததுமான கிறீஸ்தவ தேவாலயம் உள்நாட்டு வெளிநாட்டுச் செல்வந்தர் பலருடைய பணஉதவியுடன் புதிப்பிக்கப்பட்டு புதுமெருகுடன் இன்று தோன்றுகின்றது. இத்தேவாலயம் புதுப்பிக்கப்பட்ட சந்தோஷத்தை யாழ்ப்பாண கிறீஸ்தவ சபையினர் பலர் ஒன்றுசேர்ந்து இம்மாதம் 14-ம் திகதி அங்கு கொண்டாடினர். அதன்பின் 17-ம் திகதி அங்கே பலகிறீஸ்தவசபையினரும் சேர்ந்து கூட்டுப்பிரார்த்தனை நடத்தினர். அவ்வைபங்களில் கலந்துகொள்ள உலக கிறீஸ்தவசபைகளின் ஸ்தாபன தலைவராகிய டக்டர் வில்லியம் கூவ்ற் அவர்கள் விசேஷவிஜயம் அளித்தனர். இத்தேவாலயம் பல லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. செலவின் பெரும் பகுதியைக் கொடுத்து உதவிய பெருமை இந்நாட்டில் ஒல்லாந்து தேச தூதரகத்துக்கே சார்ந்தது.

## இலங்கைச் சங்கீத காரனுக்கு சர்வதேச பாராட்டு

கொழும்பு, தெகிவளை சென்மேரீஸ் தேவாலயத்தின் பாடகர் குழுவில் ஒருவராக இற்றைக்கு 10வருடங்களுக்குமுன் தேவதொண்டாற்றிவந்த திரு. நிகால் பொன்சேகா அவர்கள் இன்று கனடா தேசத்தில் சேவை செய்து வருகின்றார். அங்கு பெயர்பெற்ற சங்கீதகாரனாக அவரது புகழ் வளர்ந்து வருகின்றது: ஏற்கனவே அவரது குரலொலியை பல சங்கீதத் தட்டுக்கள் மூலமாகவும் அத்தேசத் தொலைக்காட்சி மூலமாகவும் பல ஆயிரத்தொகையான ரசிகர்கள் கேட்டுப் பரவசங் கொள்கின்றனர். இவரது புகழைக் கேட்ட தெகிவளை சென்மேரீஸ் விசாரணைப் பங்குக் கத்தோலிக்கர் தமது மகிழ்ச்சியை அவருக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

## அரபு மக்களுக்கு பாப்பரசரின் அனுதாபச் செய்தி

அண்மையில் இஸ்றயேல் ஆகாயவிமான படையினர் எகிப்து நாட்டின்மேல் செய்த குண்டுவீச்சின்போது 30சிறுவர் சிறுமிகள் மரணமாயினர் என்றும் 40பேர்படுகாயப்பட்டனரெனவும் செய்திகள் கூறின. இச்செய்தியைக் கேள்வியுற்ற பரி. தந்தை அப்பிளைகளின் பெற்றோர் இனசனருக்கு தமது ஆழ்ந்த துயரத்


(தொடர்ச்சி 5-ம் பக்கம்)


**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்காலமும் வாழ்ந்திடும் எழில்நிலை

புகழுக்காகப் பிறக்கவேண்டும்; புகழுக்கென்றே வாழவேண்டும்; பொன்றினும் புகழையே நாடவேண்டும். இது உலகக் கண்கொண்டு நோக்கும் மானிடன் கூற்று. "படைத்தான் படைப்பெல்லாம் மனுவிற்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க," "தனக்குவமை இல்லாதான் தாழ் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது" இதுவும் இன்னுமோர் கூற்று. இவையாவிற்கும் சிகரமாய் இறைமகன் யேசு "கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்" (மத். 6: 33-34) என மொழிந்து, தம் வாழ்விலும் வாழ்ந்து காட்டினர்.

பழைய ஏற்பாட்டில் "நீ உன் நாட்டையும் உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டப் போகின்ற நாட்டிற்குப் போகக் கடவாய்; நாம் உன்னைப் பெரும் குலமாகப் பலுகச்செய்து, உன்னையும் ஆசீர்வதித்து, உன் பெயரையும் மேன்மைப் படுத்துவோம். நீ ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருப்பாய், உனக்கு ஆசீர் அளிப்பவர்களை நாம் ஆசீர்வதிப்போம். உன்னைச் சபிப்பவர்களை நாமும் சபிப்போம். மீண்டும் மண்ணிலுள்ள இனமெல்லாம் உன்னிடத்திலே ஆசீர்வதிக்கப்படும்." (ஆதி. 12: 1-3) தனி மனிதனை அழைத்து ஓர் குலத்தை நிறுவுகிறார் இறைவன்.

புதிய ஏற்பாட்டில் அதே இறைவன் சிலரை மனித இதயம் வெல்லும் தனிச்சிறப்புடை மனிதர்களாக்க, தம் அன்பின் பணியை தொடர்ந்து நடத்தும் சிறப்புறு வாரிசுகளாக்க, "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நானே உங்களைத் தெரிந்து கொண்டேன்"(அரு. 16:16-17.) "நீங்கள் என் பின்னே வாருங்கள்; உங்களை, மனிதரைப் பிடிப்போராக்குவேன்" (மத். 4:19-20)என விசேஷ அழைப்பு விடுகிறார். இவர்கள் கிறீஸ்துவின் பணியை மேற்கொள்ளத் துணிந்தவர்கள். "மனிதர் முன்னிலையில் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்றுக் கொள்வேன்"என்னும் வார்த்தைக்கு வாழ்வின் வனப்பை தமக்கென்று எவ்வித விருப்பு வெறுப்பு எண்ணமல் அர்ப்பணிக்கும் நம் மெய்மறைக் குருக்கள்.

இதே அழைப்பின் ஐம்பது ஆண்டுகளை நம் திருத்தந்தை வைகாசித் திங்கள் 29-ம்நாள் கண்டுகளிப்பார். இந்நாளில் அவரது குருத்துவ மாண்பினை ஆராய்ந்து பார்ப்பது, அவர் மட்டில் எமது அன்பையும், மதிப்பையும் வளர்க்க உறுதுணையாகுமன்றோ. குருக்களின் வழியாக கிறீஸ்து சிறப்புற நம்மிடை வாழ்கிறார். அவர் திருச்சபையின் காணப்படும் தலைவர் பாப்பு தந்தை அவரின் மெய் அன்பர் அன்றோ.

இத்தாலியா நாட்டின் அல்ப்ஸ்மலையடிவாரம் இதனிடை செழுமையுடன் விளங்குவது திரோம்பியா பள்ளத்தாக்கு நாட்டின் செழுமையை விளக்கும் நகராய் அமைந்தது பிரசியா நகர். இதன்கண் செல்வச் சிறப்புடன், கிறீஸ்தவ வளத்துடன் வாழ்ந்த ஜியோர்ஜியோ மொந்தீனிக்கும், குயிடிட்டா அல்கிஷிக்கும் அன்பின் இரண்டாம் சின்னமாக 1897-ம் வருடம் புரட்டாசித் திங்கள் 26-ம் நாள் நம் அன்புத் தந்தை ஆறும் சின்னப்பர் உதித்தார். இவருக்கு நற் கிறீஸ்தவ முறைப்படி பிறந்த நான்காம் நாள் திருமுழுக்கு அருளப்பட்டு "ஜியோவான்னி பப்டிஸ்டா கென்ரிக்கோ அந்தோனியோ மரியா மொந்தீனி" எனப் பெயரிடப்பட்டது. குழந்தை மிகச்சிறிய வடிவமாக தொய்ந்திருந்தது.

— பவுலா —

குழந்தை இதய வலிமை குன்றியதாக இருந்ததால் பெற்றோர்கள் கவலையுற்றனர். இதே குழந்தை நவயுக இருபதாம் நூற்றாண்டில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சகல மாறுதற்கும், எதிர்ப்புகள், இடர்களுக்கும் கிஞ்சித்தும் அஞ்சா ஆறும் சின்னப்ப பாப்பு தந்தையாக மாறுவார்களென அவர்கள் அன்று கண்டார்களா?...அருள் வாழ்வின் மாட்சி இயம்பிடல் அரிதோ!...

பாடசாலைக்கு உடல் நலக் குறைவால் ஒழுங்குடன் செல்ல முடியா பப்டின்ரு வீட்டிலேயே அனைத்தையும் கற்றார் என்றே கூறவேண்டும். இதே மாணவன் இன்று வத்திக்கான் விட்டு வெளியுலகம் தரிசித்த முதல் பாப்புவாக விளங்குகிறார். இது இறைவன் செயலின் மாண்பு அன்றோ.

"குச்சி போல் ஒல்லியாக" இருந்த பப்ரிஸ்டா தன் வாலிபத்தின் 17-ம் ஆண்டில் குருவாக வேண்டும் என மனதில் தோன்றிய ஆவலை தம் கலாசாலை ஆசிரியரான ஆத்மகுருவிடம் வெளியிட்டார். ஓசையும், ஓலமும், பணமும், பந்தமும், போட்டியும், பூசலும், மலிந்த உலகில் இதயத் தளத்தில் தெளி மெல் ஒலியில் பேசும் ஆவியின் ஓசை இக்காளையின் செவியில் விழத்தான் செய்தது.

உடல் நலக் குறைவோ, பெற்றோரின் அரவணைப்போ, கல்வியின் சிறப்போ, செல்வத்தின் செருக்கோ எதுவும் அவர் வழியை தடைசெய்யவில்லை. அவர் வருங்காலத்தையிட்டு வேறு பலவித கனவு கண்டவர்கள் அக்காலத்திலும் இல்லாமலிருக்கவில்லை. ஆனல் குருத்துவத்தின் சிறப்பினை உணர்ந்த அவர் பெற்றோர் அதற்குத் தடைவிதித்தார்களா?...இல்லை. மகனின் உடல் நலக்குறைவு சிறிது சிந்திக்கத்தான் வைத்தது. ஆனல் இறைவனின் திட்டத்திற்கு விருப்புடன் பணிந்தார்கள். மகனின் குருத்துவப் படிப்பிற்கு இசைந்தார்கள், ஆசீர் அளித்தார்கள்.

மெய்யிளக்கம், இறையியல், திருச்சபை வரலாறு, திருநூல் இவற்றை குருமடத்திலும், சமூகம், அரசியல் இவற்றை தனது வீட்டுச் சூழலிலும் கற்றுத்தேர்ந்தார். ஒருவன் நல்லவனாய் இருந்தால் மட்டும் போதாது, நன்மையைப் பரப்பும் அப்போஸ்தலனாகவும், உண்மை உரைக்கும் வீரனாகவும் இருக்க வேண்டும் எனவும் உணர்ந்து கொண்டார். இதுவே இன்றும் அவர் "மனித உயிர்" (Humanal Vital)பற்றிவிடுத்த நிருபத்தின் மூலமும், குருக்களின் விரத்தத்துவம் பற்றி கூறிய தீர்ப்பிலும் நாம் வெளிப்படையாய்க் காணக் கூடியதாயுள்ளது. இத்தகைய குருமாணவன் வழுவா வரம் உடை புனித இராயப்பரின் இடம் பெற்றதில் வியப்பில்லை.

1920-ம் வருடம் வைகாசித் திங்கள் 29-ம் நாள் தமது இருபத்தி மூன்றுவது வயதில் ஜிவோன்னி பப்டிஸ்டா மொந்தீனி இறைவனின் நித்திய குருத்துவத்தில் இடம் பெற்றார். பாப்பரசரின் தூதர் அலுவலகச் செயலாகப் போலாந்திலும், வத்திக்கான் செயலாளரில் ஒருவராக திறமையுடன் பணியாற்றிய, இவர் 1954-ம் வருடம் மார்கழித் திங்கள் 12-ம்நாள் பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதரால் புனித இராயப்பர் போலயத்தில் அதிமேற்றிராணியாராக அபிஷேக நிறைவு பெற்று குருத்துவத்தின் பூரணத்துவ நிலையைப் பெற்றுக் கொண்டார். இதன்பின் மிலான் நகர் அதிமேற்றிராணியாராக அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பல. 1958-ம் வருடம் மார்கழித் திங்கள் 18-ம் நாள் காலஞ் சென்ற பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் இவரை கர்தினல் பதவிக்கு உயர்த்தினர்.

1963-ம் வருடம் ஆனித்திங்கள் பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் இறந்ததும், புதிய பாப்பரசர் தெரிவை முன்னிட்டு மிலானிலிருந்து உரோமைக்குவந்த மொந்தீனி ஆண்டகை 2-ம் நாள் வாக்கெடுப்பில் பாப்பரசராக அவர் எதிர்பாராத வகையில் தெரிந்தெடுக்கப்பட்டார். அதே திங்கள் வரும் புனித சின்னப்பரின் நாமம் ஏற்று 1963-ம் வருடம் 30-ம் நாள் முடிபுனைந்து எம் பாப்பு தந்தையானர். இற்றுடன் ஏழு சிறப்புறு நல்லாண்டுகள் நம் தந்தை எமக்கு அன்புப்பணி ஆற்றுகிறார். வத்திக்கான் சங்கத்தை சிறப்புற நடத்தி வைத்ததுடன், தாமே புனித சின்னப்பருக்கு நிகராக பயணங்கள் புரிந்துள்ளார். சந்திரனில் கால்வைத்த முதல் மனிதரையும் ஆசீர் அளித்து, வாழ்த்து நல்கி புதிய சகாப்தத்தைக் கண்டுகளிக்கிறார்.

இத்தகைய வீரத் தந்தை இன்று திருச்சபையில் உள்ள நிலைகளையும், நினைப்புக்களையும் அறிய வரும்போது அவரது மனது புண்ணுகிறதாக கூறினரென்றால், அது கிறீஸ்தவர்களாகிய எம்மவர் பொறுப்பற்ற பேச்சும் முறையற்ற வாழ்க்கையுமே அதன் காரணமாகும்.

---

✝

**திரு. வில்லியம் செல்லையா**
அவர்கள்
அமரத்துவமடைந்த

## 2-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்: 1889 மறைவு: 1-6-68

**"சீவியத்தில் என்னை அறிந்து நேசித்தவர்களே! உங்கள் அனுதின செபத்தில் என்னை மறவாதீர்கள்."**

எங்கள் குடும்பத்தின் ஒளியாக விளங்கிய எமது அன்புத் தந்தை வில்லியம் செல்லையா இறைவனடி சேர்ந்த ஈராண்டு நிறைவு தினம் 1-6-70இல் பூர்த்தியாகிறது. மறுதினம், ஏழாலை, பேசாலை, ஊர்காவற்றுறை ஆகியாம் இடங்களில் இளைப்பாற்றிப் பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் குருக்கள், கன்னியர், மற்றும் அனைவரும் அவரின் ஆன்மசாந்திக்காக வேண்டுமாறு அன்புடன் பணிந்து கேட்கின்றோம்.

தந்தையை இழந்து துயருறும் ஏக புதல்வி,
சங். சிஸ்ரர் மரிய மர்சலீனு.

பெருமகள்:
சங்.சிஸ்ரர் மேரி நொயெலா

மக்கள்:
துரைச்சாமி, அந்தோனிப்பிள்ளை, இரத்தினம்.

மருமக்கள், பேரப்பிள்ளைகள்:
மயிலங்காடு, சுன்னாகம்.

---

மரியாயின் மைந்தர் பாப்பு தந்தை குருத்துவ தங்கவிழாவினை நினைந்து பெருமகிழ்வு கொள்ளும் நாம், எம் மவர் மத்தியில் இன்னுமோர் உன்னத குருவாம் எங்கள் ஆயர் தந்தை எமிலியானுஸ் ஆண்டகை அவர்களையும் நினைவு கூருவோம். அவர் குருவாகவும், ஆயராகவும் எம யாழ் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய தொண்டு அனந்தம். இம் மாதத்திலேயே அவர் தமது மேற்றிராணித்துவ இருபத்தோராவது அபிஷேக நிறைவு தினத்தைக் கண்டுள்ளார். இறைவன் இவ்விரு மாபெரு குருதிலகங்களால் உலகிற்கும், சிறப்பாக எமக்கும் அளித்த ஆசீர், அருள்கள் நிகரில. இவற்றிற்கு இறைவனுக்கு மனமூவந்த நன்றி கூறுவோம்.

இத்துடன் இறை அரசை நிலைநாட்டப் பெற்றோர், சுற்றம் துறந்து, பிறர்நலமநாடி, குருத்துவப் பணியின் பழுவேற்று வாழ முன்வந்துள்ள எம் திருமறைக் குருக்கள் அனைவருக்கும் எம் செபத்தாலும், சொல்லாலும், செயலாலும், உத்தம வாழ்வாலும் ஆதரவளித்து உற்சாகமூட்டுவோம். "அறுவடையோ மிகுதி. வேலையாட்களோ குறைவு; ஆதலால், தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றுடுங்கள்" (மாற். 10: 37—38)என ஆயனில்லா ஆடுகள் போல் தவித்த மக்கட் கூட்டத்தை நோக்கிக்கூறிய யேசுவுடன் ஒன்றித்து நாமும் வேண்டுவோம். வாழ்க எம் பாப்பு தந்தை! வாழ்க எம் ஆயர்தந்தை!! வளர்க குருத்துவம்!!! ஓங்குக திருமறை!!!!

---

✠

**பள்ளிமுனை எஸ்தாக்கி யான்சனின்**

## 5-ம் வருட மரணஞாபகம்

**3-6-1970.**

"இன்றுடன் ஐந்தாண்டு
கழிந்ததப்பா!
இன்னமுமே எம்கண்ணீர்
ஓய்ந்ததில்லை.
கர்த்தன் பதம் நாடிவிட்ட
கருணை அப்பா
கண்ணீரைத்துடைக்கும்
வழிகாணச் செய்வாய்"

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 3-6-70 புதன்கிழமை காலை 6-30மணிககு பள்ளிமுனை புனித லூசியம்மாள் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

மக்கள்: இராஜேஸ்வரி, ஜேசா, மேபிள், யசிந்தா, கியோமார், நிர்மலா, கிறேஷியன், றமீலா மெல்சின்.

மருகர்: எம். ஆனந்தம் ஜேச், எம். அல்பிறட் ஜேச், எம். ஸ்ரனிஸ்லாஸ் பெரோரா.

பேரர்: பிறக்ஸி, வினிசியா, மெக்ஸி.

மற்றும் சகோதரிகளும், இனபந்துக்களும்.

"இராஜேஸ்வரி இல்லம்"
பள்ளிமுனை.

68|70.

---

✠

ஆண்டவரில் மரிக்கிறவர்கள்
பாக்கியவான்கள்.

**திரு. க. அந்தோனிகுலாஸ்**
அவர்களின்

## 2-வது வருட மரண ஞாபகம்

**(29-5-1968 மறைவு)**

இவரின் ஆன்ம சாந்திக்காக நிகழும் வைகாசி 29-ந்திகதி வங்காலை, புனித அன்னம்மாள் ஆலயத்தில் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவருக்கு கிறீஸ்துவில் உத்தானத்தின் மகிமையை விரும்பும்.

அ. கத்தரின் பீரிஸ், வண. பிதா பிரான்சிஸ் குலாஸ். அ. ம. தி, சங். சகோதரி யூலியானு, சங்.சகோதரி மரியெற்று, மரியதாஸ் குலாஸ், வி. அ. லெம்பேர்ட் மொற்றில்டா, அ. சொய்சா செலின். மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் இனபந்துக்கள்.

வாழ்வில் சிநேகித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்.

வங்காலை.

---

### நன்றியறிந்த தோத்திரம்

பிறேக் நகர், குழந்தை யேசுவிடம் நான் கேட்ட மன்றாட்டு அதிவிரைவில் அனுகூலமானது. நேர்த்தியின்பிரகாரம் இதனைப் பிரசுரிக்கிறேன். அவர் நாமம் என்றும் புகழப்படுவதாக!

பாலக யேசுவின் பக்தை

---

● 6-வது சின்னப்ப பாப்பரசர் சென்ற 1969-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 26-ம் திகதியன்று தமது 72-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். நிகழும் 1970-ம் ஆண்டு வைகாசி 29-ம் திகதியன்று தமது குருத்துவ 50-வது வருட செம்பொன் யூபிலி விழாவைக் கொண்டாட விருக்கின்றார். அவர் 1920-ம் ஆண்டு வைகாசிமாதம் 29-ம் திகதி குருப்பட்டம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனுக்குலத்தின் இரட்சிப்பில் தேவ அன்னையின் பங்கு

வைகாசி மாதம் தேவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட காலம். அதில் வைகாசி முதற்தேதி, தொழிலாளர்தினம். தொழிலாளரின் மேல்வரிச்சட்டமான பரி. சூசையப்பர் இத்தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாட வைக்கிறார். அவரது தொழிலைச் சிறப்பிக்க, உலகுக்கு முன்மாதிரியான குடும்பமாய் அமைய, அவருக்கு வாழ்க்கைத் துணைவியாய் அமைந்தவ பரி. கன்னிமரியம்மாளே. இவ்விருவரும் தங்கள் எளிமை பொருந்திய தூயவாழ்வால், உலகத்தவர் கண்ணுக்கு, குடும்பத்தினராகவும், இறைவன் சமுகத்தில் தூய கன்னிமையாகிய கற்புள்ள விரத்தராகவும் வாழ்ந்தனர் என்பது உலகறிந்த விஷயம்.

பரி. கன்னிமரியம்மாளை இறைவன் நித்திய காலந்தொட்டே மனுக்குலத்தின் இரட்சகருக்கு தாயாக நியமிக்கச் சித்தங் கொண்டார். எவ்வாறெனில் இசையாஸ் தீர்க்கதரிசி வசனித்தபடி 7-ம் அதி. 14-ம் வசனத்தில் "ஓர் கன்னிகை கர்ப்பந்தரித்து ஓர் குமாரனைப்பெறுவாள். அவர் இம்மனுவேல் என்று அழைக்கப்படுவார்" என்பதாம். வாழுமுன் வரலாறு வகுக்கப்பட்ட கிறீஸ்துவுடன், மரியன்னையும் அவ்வரலாற்றில் ஆயிரக்கணக்கான வருடங்களின் முன் இடம்பெற்றிருக்கிறாள். இவ்வாறு வாழுமுன் தீர்க்கதரிசிகள் வாயிலாக உரைக்கப்பட்ட இக்கன்னிகையின் மகத்துவம் தான் எவ்வளவு? இங்ஙிலையில் நமது கன்னிமையோ, தமது மேலான வரங்களை அவம் போக்காது, இறைவனை அதிகம் சினேகித்து, அவரின் வாக்கியங்களை விசுவசித்து, அவரில் முழுநம்பிக்கையும் வைத்துச் சீவித்தாள். அவள் இறைவனை எவ்வளவாகச் சிநேகித்தாள் என்றால், அவளது சினேகம் விண்ணரசை முற்றுக்கை இட்டு, திரியேக தேவனையே சுவீகரிக்க வைத்தது. பிதாவின் வார்த்தையும், தூய ஆவியானவரின் அருளும், திருச்சுதனை அவளது உதரத்தில் உருவாக்கியது என்றால், அவளின் பரிசுத்ததனத்தை எதற்கு ஒப்பிடலாம்? அதனாலேயே பக்தர்கள் அவளை 'மோட்ச அலங்காரி' என்று வர்ணிக்கின்றனர். அன்றியும் அவளது பட்டற்ற சினேகம் இறைவனிடத்து தளப்பமற்ற, அசைக்கமுடியாத விசுவாசத்தையும், திடமான நம்பிக்கையையும் உண்டாக்கியது. அதனாலேயே, அவள் தன்னிடம் இறைமகன் உருவாகும்படி, வானதூதரால் கூறப்பட்ட இறைவாக்கை நம்பினாள். தனது கன்னிமைக்குப் பங்கம் உண்டாகாதவாறு இறைமகன் உருவாகப் போவதை விசுவசித்தாள். தான் இறைமகனின் தாயாகப் போவதை உணர்ந்தாள். அவ்விசுவாச உணர்வு, மலைகளைப் பெயர்க்கத்தக்கது மாத்திரம் அல்ல, மோட்சத்தையே இவ்வுலகுக்குக் கொணர்ந்த விசுவாசமாகி விட்டது. விண்ணையும், மண்ணையும் ஒன்றித்து வைத்த பெருமை நம் தேவ அன்னைக்குக் கிடைத்த தனிப் பெருமையல்லவா?

அவளது தளப்பமற்ற விசுவாசம், தான் கருவுற்றிருப்பதை அறிந்த பரி. சூசையப்பரின் ஐயுறவை முதலாய் பொருட்படுத்தவில்லை. பரி. சூசையப்பர் தன்னை விட்டுப் பிரிந்தால், உலகம் மரியமதலேனம்மாளுக்குச் செய்ய நினைந்ததுபோல், கல்லால் எறிந்து கொல்வார்களே என்று பயப்படவும் இல்லை. இது விஷயத்தில் தன்னை முழுமையும் இறைவனிடம் கையளித்து வாழ்ந்தாள். என்ன அதிசயம்! பரி. சூசையப்பருக்கு இறைவன் வானதூதர்மூலம் அவளது பரிசுத்ததனத்தை அறியவைத்தார். பரி. சூசையப்பரும் தனது அறியாமைக்கு வருந்தி, அவளை ஏற்றுக் கொண்டார். இவ்வித ஐயுறவு நமக்கு இரண்டு பெரிய உண்மைகளை விளக்குகிறது. ஒன்று, அவர்கள் இருவரும் உண்மையாகவே விரத்தராய் இருந்தார்கள்என்பது, 2-வது, அவ்விடத்தில் உற்பவித்துப் பிறந்தவர் 'இறைமகன்' என்பது.

அடுத்தபடியாக, நம் தேவ அன்னை மனுக்குலத்தின் இரட்சிப்பில் வேறும் எவ்வெவ்விஷயங்களில், பங்கு கொண்டாள் என்பதை ஆராய்வோம். "இதோ உமது அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்காகக் கடவது" என்று கூறி அடிபணிந்த அன்னை, வாக்குப் பண்ணப்பட்ட மெசியா தன்னிடம் உருவாகப் போவதை உணர்ந்தாள். இறைவனின் மட்டற்ற கருணையை நினைந்து தன்னைத்தான் தாழ்த்தினாள். (பரி. லூக். 1-ம் அதி. 46—55-ம் வச.) இப்பகுதியில் கூறியுள்ளபடி, "என் ஆத்துமமானது என் ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில், என்மனம் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது. ஏனெனில், தமது அடிமையானவளுடைய தாழ்மையை—கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினார். இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று தொடர்ந்து, நன்றிக் கீதம் பாடிமுடித்தாள். இன்று கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் இப்பரிசுத்த அன்னையை வானதூதர் வாழ்த்தியது போல், "அருள் நிறைந்தவளே! வாழ்க" என்று தலைமுறை தலைமுறையாக வாழ்த்துகின்றனர். ஏனெனில் அத் தேவ அன்னையே, கிறீஸ்துவின் பிறப்புத் தொடக்கம் அவரது மரண[illegible] இல்லை, அவரது [illegible] திருச்சபை ஆரம்பம் ஈறாக உடன் பங்காளியாக நின்றுதவினாள் என்று சுவிசேஷம் நமக்கு அறியத் தருகிறது. இறைமகனைப் பெற்றுவளர்த்துத் தந்ததுடன், நமது இரட்சிப்பில் அவவின் பங்கு முடிவடைந்து விடவில்லை. தேவசித்தப்படி யேசுநாதர் போதிக்க ஆரம்பித்தபோது, கானாவூர்க் கலியாணத்தில் ஆறுசாடி தண்ணீரை திராட்சாசமாக்குவித்து, தமது குமாரன் 'இறைமகன்' என்பதை உலகுக்கு அறியவைத்தா. தமது தாயின் கேள்விக்கிசைந்து, (தவம் செய்து தமது போதனையை ஆரம்பிக்க இருந்த யேசுநாதர்) எனது நேரம் இன்னும் வரவில்லையே என்று கூறியும், தமது அன்னைக்குப் பணிந்து, தமது முதற் புதுமையைச் [illegible] சிலுவையடியிலும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சத்தியம் தவறாது

(செல்வி தெல்மா கோமஸ் — திருமலை)

புண்பட்ட இதயத்தில் வேதனைகள் முகமெல்லாம் பரவி நிற்க, எண்ணற்ற கவலைப் பெருஞ்சுமைகள் நெஞ்சை அழுத்தித் தள்ளாடச் செய்ய அதோ...... முதன்முதலாக அடியெடுத்து வைக்கும் ஒன்பதுமாதக் குழந்தைபோல தட்டுத் தடுமாறிச் சிறையினுள் உழல்கின்றானே அவன் பெயர் செல்வதுரை. அவன் கரங்கள் சிறைக்கம்பிகளைப் பற்ற முயல்கின்றது; ஆனால், வலுவிழந்த கரங்கள் தளர்கின்றன. ஏன் இன்று இனந்தெரியாத தளர்வு, கலக்கம்; ஒருவேளை அடுத்தவாரம் ஏற்படப்போகும் அந்தப் பயங்கரநாளை நினைத்தா? ஆம் அப்படித்தான் இருக்கவேண்டும்; அவன் வாய் ஏதோ முணுமுணுக்கின்றது; கண்ணீர் பெருகுகின்றது; அந்தக் கண்ணீர் ஆனந்தக்கண்ணீரா? துன்பக் கண்ணீரா? அதை நாம் அறிய வேண்டுமாகில் செல்வதுரையின் கடந்துபோன ஏட்டைத்தான் புரட்டவேண்டும்.

"உண்மை... அது எங்கே இருக்கிறது" என்றுகேட்கலாம்போல் அவனுக்குத் தோன்றுகிறது. செல்வதுரை அன்று நீதிமன்றத்தில் உண்மையை அப்படியே கூறினான். அங்கே யார் அதனைக் கேட்டார்கள்? "பச்சைப் பொய்யை" அல்லவா உண்மை என்று ஒப்புக்கொண்டார்கள். இந்த வேடிக்கையான உலகத்தில் பேச்சுக்கும் செயலுக்கும் தொடர்பே கிடையாதா?

செல்வதுரை வேலைபார்க்கும் கம்பெனியின் முதலாளி தூங்கும்போது அன்றிரவு யாரோ தலைமீது கல்லைத்தூக்கிப்போட்டு கொலைசெய்து விட்டார்கள். அன்றிரவுதான் செல்வதுரை தன் மனைவி ஜெயத்தின் பிரசவத்திற்குச் சிறுதொகைப் பணம் கேட்க முதலாளியின் வீட்டை அடைந்தான். "டேய், செல்வதுரை!" என்று தடித்த குரலொன்று கேட்டது. அப்பொழுதுதான் முதலாளியின் வீட்டு வாசற்படியில் கால்வைத்த செல்வதுரைக்கு ஒன்றுமே புரியவில்லை. "நடடா பொலிஸ் நிலையத்திற்கு" என்று அவர்கள் கட்டளையிட்டபொழுது செய்வதறியாது திகைத்தான். உண்மையைக்கூறி இரந்தான். கடவுளின்மேல் சத்தியம் செய்தான். மன்றாடினான் பலன் ஒன்றுமில்லை; கடைசியில் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான் வேறுவழியின்றி. தாழ்ச்சியுடன் மாதாவை மன்றாடிக்கொண்டு பிரசவவேதனைப்படும் மனைவி ஜெயத்தை நினைத்துத் துக்கம் பெருக அழைத்த இடத்திற்குச் சென்றான். அவனைப் பேசவிடாமலேயே அவன்மீது கொலைக்குற்றம் சாட்டி முடித்துவிட்டார்கள். ஒருவருடமாக அந்தவழக்கு நடைபெற்று, ஈற்றில்செல்வதுரைகுற்றவாளியாகக்கண்டு தூக்குக்கயிற்றை அணைக்கவேண்டியவனாகினான்.

இந்த ஒருவருடத்துக்குள் அவன் அறிந்த செய்தி இதுதான். அதாவது, அவன்மனைவி கவனிப்பாரற்றபடியால் பெண்குழந்தை பிறந்ததும், மனைவி இறந்துவிட்டதாகவும் அவனது குழந்தை அநாதை மடத்தில் வளர்க்கப்பட்டு வருவதாகவும் அறிந்தான். அந்த வேதனையின் சுமை இன்று செல்வதுரையை நிமிரமுடியாமல் செய்துவிட்டது. நாட்கள் நகரநகர செல்வதுரையின் மனதில் ஓர் ஆசை. தன் செல்வமகளை இறப்பதற்குமுன் ஒருமுறையாகுதல் பார்த்து, அதன் பட்டுக்கன்னங்களில் கடைசிமுத்தமிட வேண்டுமென்பது. ஆனால், அது முடிகின்ற காரியமா? அவ்வாறு கண்டாலும் அந்தப் பிஞ்சுப் பாலகிக்கு செல்வதுரை எப்படி உண்மையை உரைப்பான். செல்வதுரையின் தலை சுற்றியது. பொய் மெய்யானால் நீதியை எங்கே தேடுவது? பிலாத்துஸ் அரண்மனையில் யேசுநாதர் குற்றவாளியைப்போல்நின்று சிலுவை மரணத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டதைநினைந்து ஆறுதலடைந்தான். "நீதியின் நிமித்தம் உபத்திரவப்படுபவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது." இவ்வாக்கியத்தைச் செல்வதுரை நினைவுகூர்ந்து பூரிப்படைந்தான்.

அவன் மனக்கண்முன்னே மனைவி ஜெயந்தோன்றி, 'அத்தான் கவலைப்படாதீர்கள்; சத்தியம் தவறாது" என்று கூறுவதுபோல் இருக்கின்றது. செல்வதுரை சத்தியத்தை நினைத்து ஓர் அலட்சியச்சிரிப்பை உதடுகளில் நெளியவிட்டான். அவன்மனம் ஒருநிலைப்படுகின்றது. சென்றவைகளை விட்டு செல்லப்போகும் நாட்களை நினைக்கின்றான். தான் நல்ல மரணத்தையடைய உதவிசெய்யும்படி தேவதாயை மன்றாடி, செபமாலைமணிகளை உருட்டத் தொடங்கினான்.

இந்த நிலையில் மூன்றுநாட்கள் கழிந்தது. இறப்பதற்கு இன்னும் இரண்டுநாட்கள் மட்டுந்தான். அதை நினைத்ததும் செல்வதுரையின் இதயத்திலிருந்து இரத்தம் குபீர் குபீர்என்று பாய்ந்தது.

குணதிசைக் கதிரவன் பொன்மேனிகாட்டி, மின்னலையூட்டி, கண்ணைப் பறிக்கும் கலையழகுடன் பள்ளியெழுந்தான். எங்கும் இளங்காலைப்பொழுது புத்தம்புதிய சூழலுடன் குதூகலநடனம் புரிந்தது. அன்று செல்வதுரையின் மனதிலும் இனந்தெரியாதசந்தோஷம் நிரம்பி இருந்தது. சிறைகாப்போன் கதவைத்திறந்து, "சிறைஅதிகாரி உங்களை அழைக்கின்றார்" என்றான். இவ்வார்த்தையைக்கேட்டு செல்வதுரை திணறினான். சிறை அதிகாரி முன் நிறுத்தப்பட்டான். "முதலாளியைக் கொலைசெய்த உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடித்தாயிற்று. நீர் வீடுசெல்லலாம்" என்று கூறி வழியனுப்பினார்கள்.

தன்னையே நம்பமுடியாமல் திகைத்தான். பின் இவைகள் எல்லாம் உண்மையென உணர்ந்து தேவாலயம் நோக்கி நடந்தான் தேவதாய்க்கு அஞ்சலிசெய்ய. பங்குக் குருவானவரிடம் நடந்ததைக்கூறினான். அவன்மேல் இரங்கிய குருவானவர் அவனுக்கு ஒரு பாடசாலையில் ஆசிரியத் தொழிலை பெற்றுக் கொடுத்தார். செல்வதுரை தன்ஒருவயதுச் செல்வியைக் கண்டான் அநாதை மடத்தில். மகிழ்ச்சி பொங்கமுத்தமிட்டான். மீண்டும் அவர்கள்வசம் ஒப்புவித்து உதவிகள் புரிவதாகவும், அவன் மகளைத் திருமறையில் பக்தியுள்ள பெண்ணாக வளர்க்கும்படி கேட்டு விடைபெற்றான்.

கம்பெனியில் வேலைபார்த்த பெண்ணாகிய வகிதா முதலாளியின் தீயஎண்ணத்தைச் சகிக்கமுடியாது அவர்தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுக் கொன்றுவிட்டாள். தன்னால் சிறைசென்ற செல்வதுரைக்கு மாணதண்டனை நெருங்குவதை உணர அவள் மனச்சான்று வண்டாகி அவளை அரித்தது. எனவே மனந்தளராது உண்மையைக்கூறி சட்டப்பிரகாரம் தண்டனைதரும்படி சட்டப்பாதுகாவலரிடம் கேட்டிருக்கிறாள்என்று செல்வதுரை மற்றவர்கள் வாயிலாக அறிந்தான். ஆச்சரியப்பட்டான். சத்தியம் தவறாது என்ற உண்மையை தெட்டத்தெளிவாக உணர்ந்தான். சாவுமுனையிலும் சத்தியம் செல்வதுரைக்கும் உயிர்ப்பிச்சையளித்துவிட்டதல்லவா?

இருபது வருடங்கள் வழிந்துவிட்டது. அவனின் மகள் ஜெயசீலி இன்று ஒருகன்னியாஸ்திரி. செல்வதுரை ஒரு பணக்காரன். ஆயினும் அவன் கடவுளையும் ஏழை எளியவர்களையும் மறக்கவில்லை. தந்தையின்கதையை மகள் ஜெயசீலி இன்று எத்தனையோ பேருக்கு உதாரணமாகக் காட்டிவிட்டாள். அதனால் இன்று எத்தனையோ இளம் உள்ளங்கள் கடவுள்பால்ஈர்க்கப்பட்டுவிட்டது. என்னே தெய்வத்தின் செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் இறகோரி பெரோரா, யே.ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

[தொடர்ச்சி]

வேதகலாபனையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் போர்த்துக்கீச சந்ததியினரே யாவார்கள். இவர்கள்மீது எவ்விதமான இரக்கமோ அல்லது அனுதாபமோ காட்டப்படவில்லை. இவர்கள் தங்கள் மத நம்பிக்கையி னிமித்தம் மிகவும் கஷ்டப்பட வேண்டியவர்களாயிருந்தனர். இதன் காரணமாக இவர்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டனர்; அவமானப்படுத்தப்பட்டனர்; வறுமையில் தள்ளப்பட்டனர்; கைத்தொழில்கள் செய்து சீவிக்கவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த அடிமைத்தளையினால் கிடைத்த அநியாயங்களை இவர்கள் இன்னமும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

மனித பெலவீனத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது அநேகமான மக்கள் உண்மை விசுவாசிகளாயிருந்தனரென்பது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாகவிருக்கும். இப்படியிருந்தபோதிலும் விசுவாசத்தைக் கைவிடச்செய்வதற்காக ஆட்சியாளர்கள் வையாண்டுவந்த தூண்டுதல் முயற்சிகளாலும் அடக்குமுறைகளாலும் விசுவாசத்தை மறுதலித்தோர் கொஞ்சநஞ்சமல்ல. முதலியார் பட்டமே வாழ்க்கையின் இலட்சியமெனக் கருதிய வர்க்கத்தினர் இவர்களுள் முதன்மையானவர்களாகவும், மோசமானவர்களாகவு மிருந்தனர். குடிசால் இராணுவ பதவிகளிலும், ஏனைய நிருவாக பதவிகளிலும் அந்நியர்களையே ஒல்லாந்தர் நியமித்தனர். ஆனால், போர்த்துக்கீசர் இந்த முறையைக் கைக்கொள்ளவில்லை. போர்த்துக்கீசர் வெறுத்துவந்த சாதியென்றமாயப் பிசாசுக்கு ஒல்லாந்தர் தூபம் போட்டுவந்தனர். ஒவ்வொரு சாதியினரிடமிருந்தும் இவர்கள் வேலைவாங்கிவந்தனர். ஒல்லாந்தரின் மதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குத் தலைமைக்காரர் பதவிகள் மறுக்கப்பட்டன. ஒல்லாந்தர் விரித்த வலையில் சிக்கியவர்களுக்கு முதலிப் பட்டங்கள் வழங்கப்பட்டன. 150 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயர் இங்கு வந்து சேர்ந்தபொழுது இதே முதலிமார்களும் இவர்களது சந்ததியினரும் இங்கிலாந்துத் திருச்சபைக் கிறிஸ்தவர்களாக மாறி, முன்னைய பதவிகளில் தொடர்ந்து இருந்துகொண்டதுமல்லாமல், அடிமை வாழ்வினால் அடையக்கூடிய பயன்களையும் வசதிகளையும் அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

இன்னொருசாரார் படிப்படியாக விசுவாசத்தைக் கைவிடத்தொடங்கினர். அழுத்கம தொடக்கம் புத்தளம் வரைக்குமுள்ள கடற்றொழிலாளர்கள் பொதுவாகக் கத்தோலிக்கர்களாக — குறைந்த பட்சம் கிறிஸ்தவர்களாகவிருக்கின்ற அதே நேரத்தில் பெங்தோட்டை தொடக்கம் தொங்தரா வரைக்குமுள்ள அவர்களின் இனசனர்கள் கத்தோலிக்கர்களாகவோ, அல்லது கிறீஸ்தவர்களாகவோ இல்லாதிருப்பதன் காரணமென்ன? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஒல்லாந்தரின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் அழுத்கம தொடக்கம் தொங்தரா வரைக்குமுள்ள பிரதேசமுமொன்றாகும்.

அடுத்தது யோசேவாஸ்குருவானவர் இலங்கைக்கு வந்த நேரத்தில் முதலாவது கத்தோலிக்க பரம்பரையினர் அழிந்தொழிந்துபோயினர். தியான சபைக் குருக்கள் கொழும்புக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தில் கால் வைக்கத் தவறிய படியினால் இங்கு வாழ்ந்த கத்தோலிக்க சந்ததியினர் கத்தோலிக்க மதத்தை அனுசரியாதவர்களாகவே வளர்ந்து, இறுதியில் தம்மைச் சூழவுள்ளவர்களுடன் இரண்டறக் கலந்துகொண்டனர். இன்றும் கூட இப்பகுதியில் வாழும் மக்கள் போர்த்துக்கீசப் பெயர்களைத் தாங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். தமது மூன்னோர்களின் மதத்தை ஞாபகப்படுத்து முகமாகவே அவர்கள் இப்பெயர்களைச் சூடிக்கொண்டபோதிலும் தற்காலத்தில் சிலர் இப் பெயர்களை முதலெழுத்துக்களாகக் குறுக்கியிருக்கின்றனர்; இன்னும் சிலர் முற்றாக இவைகளைக் கைவிட்டுமிருக்கின்றனர். இம்மாதிரியாகவே இந்துசமயப் பழக்கவழக்கங்களை முற்றாகக் கைவிடாத அநேக டச்சுத் திருச்சபைக் கிறீஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பெயரளவில் மாத்திரமே கிறீஸ்தவர்களாகச் சீவிக்கின்றனர்.

சருவேசுரான் சுமார் இருபது ஆண்டுகளாகத் திருச்சபையைப் புடம்போட்டபின்னர் பரிசுத்ததனம் பொருந்திய மேன்மைமிக்க இந்திய தவப்புதல்வரான ஆசாரத்திற்குரிய யோசேவாஸ்முனிவரை இலங்கைக்குச் செல்லுமாறு ஏவி, அவர்மூலம் புதிய திருச்சபையைக் கட்டியெழுப்புவதற்குத் திருவுளங் கொண்டார். யோசேவாஸ் கொங்கணப் பிராமண குலத்தைச்சேர்ந்த தியானசபைக் குருவானவராவார். தியான சபையிலிருந்த இவரது ஏனைய கூட்டாளிகளும் கொங்கணப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். எனவே தான் தியான சபைக் குருக்களை அரைச்சாதிக்காரரென இலங்கைச்சரித்திரமெழுதிய புரளிக்கார எழுத்தாளரொருவர் குறிப்பிடுவதற்கு முற்பட்டிருக்கிறார். யோசேவாஸ் இந்தியராகவிருந்த போதிலும் ஒல்லாந்தரின்கண்களுக்குத் தென்படாமல் இங்கு வந்து சிங்கள — தமிழ் மக்களிடையில் பணியாற்றினர். இவர் கஷ்டங்களை அனுபவித்துப் பரிசுத்தமான வாழ்க்கை நடத்தியதுமல்லாமல், கத்தோலிக்கத் திருச்சபை பரவியிருந்த கிழக்கிந்தியாவிலும் பெயர்பெற்றுவிளங்கினர். 1686-ம் ஆண்டில் ஒல்லாந்தரின் கொடுமைகள் உச்சகட்டத்தை அடைந்த நேரத்தில் இவர் இலங்கைக்கு வந்து தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு ஆறுதல் கூறியதுமல்லாமல், மாறு வேடத்தில் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள கத்தோலிக்கர்களின் ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்தபின்னர் கண்டி இராச்சியத்திற்கு மிகுந்த தைரியத்துடனே பயணமானார். தன்னை கொலைப்பதற்காகக் குருமாரைத் தேடிப் பிடிப்பதில் ஒல்லாந்தர் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இந்தப் பயங்கரத்தையும் பொருட்படுத்தாத யோசேவாஸ், மலையகத்தைத் தனது மத்தியஸ்தானமாக வைத்துக்கொண்டு, ஒல்லாந்தரின் பிரதேசங்களில் சுற்றித்திரிந்து அங்குள்ள விசுவாசிகளுக்கு ஆறுதல் சொல்லி அவர்கள் மத்தியில் தேவதிரவிய அனுமானங்களையும் நிறைவேற்றி வந்தார். இவர் கோவையிலிருந்து குருக்களை வரவழைத்து அவர்களின் உதவியோடு கத்தோலிக்க திருச்சபைக்குப் புத்துயிரளித்தது மல்லாமல், அநேகரை மனந்திருப்பி அவர்களைக் கிறீஸ்துவின் பட்டியில் சேர்ப்பித்தார். ஒல்லாந்தரின் பிரசாரத்தை முறியடிக்கவேண்டுமென இவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட இவரது உதவியாளரான அருட்திரு. யாக்கோமே கொன்சால்வேஸ் அவர்கள் சிங்கள — தமிழ்க் கத்தோலிக்க இலக்கியத்தை ஆக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். தியானசபைக் குருக்கள் தமது அயராத உழைப்பின்மூலம் இலங்கைக் கத்தோலிக்கர்களைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்ததுமல்லாமல் ஒல்லாந்தரின் அடக்குமுறைகளையும் வலுவிழக்கச் செய்தனர்.

கண்டி இராச்சியத்தில் சிங்கள மன்னர்கள் செங்கோல் செலுத்திய காலத்தில் தியான சபைக் குருக்களுக்கு அமோக வரவேற்பிருந்தது. மலபார் மன்னர்கள் அங்கு சிம்மாசனமேறியதும், அவர்கள் ஒல்லாந்தரைப்போன்று திருச்சபையைத் துன்புறுத்தத் தொடங்கினர். கத்தோலிக்க மதம் இறைவனுடையதென்று சொன்னால் அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாதென அன்றொருநாள் ஜெருசலேம் உயர்நீதிமன்றத்தில் கமலியேல் என்பவர் எடுத்துரைத்த உண்மையை ஒல்லாந்தரும் உணரத் தொடங்கினர். இதன் காரணமாக அடக்குமுறைகளிலிருந்து வெளியேறிய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை தன்னைப் புதுப்பித்து, பரிசுத்தப்படுத்தி உறுதிப்படுத்திக் கொண்டது.

1796-ம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் அவர்கள் கத்தோலிக்க திருச்சபையைக் குற்றவியல் சட்டங்களிலிருந்து விடுவித்தனர். ஒல்லாந்தரைப்போன்று வெறிபிடித்தவர்களான ஆங்கிலேயர்கள் தமதுசொந்தநாட்டில் கத்தோலிக்கர்களை இம்சைப்படுத்தியபோதிலும் இலங்கையில் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஒல்லாந்தரால் வகுக்கப்பட்ட குற்றவியல் சட்டங்களிலிருந்துகத்தோலிக்கதிருச்சபையை விடுவித்து அதற்குப் பூரண சுதந்திர மளித்தனர். ஆங்கிலேய சாம்ராச்சியத்தில் முதலாவது விடுதலைபெற்ற கத்தோலிக்கர்கள் இலங்கையரே யாவார்கள். 1815-ம் ஆண்டு இலங்கை முழுவதும் ஆங்கிலேயராட்சிக் குட்பட்டபோது ஆங்கிலம் அரசகரும மொழியானதுமன்றி, சட்டம், கல்வி, வர்த்தகம் போன்ற சகல துறைகளிலும் ஆங்கிலமே போதனா மொழியெனப் பிரகடனம்செய்யப்பட்டது. அக்காலத்தில் மக்களுக்கு ஆங்கிலமொழியை அறிமுகப் படுத்துவதில் சிரமமிருக்கிறதைக்கண்ட அரசாங்கம், புரட்டஸ்தாந்த மிஷனரிகளின் உதவியை நாடியது. பாடசாலைகள் நிறுவுவதற்காக காணிகளும் ஏனைய பணஉதவிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. புரட்டஸ்தாந்த குருமார் அரசாங்க உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டு நாட்டின் வருமானத்திலிருந்து அவர்களுக்குச் சம்பளமும் வழங்கப்பட்டது.

சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட இங்கிலாந்து திருச்சபையின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு புரட்டஸ்தாந்த மதப் பாடசாலைகளில் கல்விகற்றவர்கள் சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். அரசாங்கமும் அவர்களுக்கு ஆதரவளித்தது. அதேநேரத்தில் கோவைவாழ் போர்த்துக்கீச பிரசைகளான கத்தோலிக்க குருமார் ஆங்கில அறிவில்லாத காரணத்தினாலும் பொருளாதாரம் போதாமையினாலும் இலங்கைவாழ் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினரான கத்தோலிக்கர்களின் நன்மைக்காக ஆங்கிலக் கல்விநிலையங்களை ஆரம்பிக்க முடியாத நிலையிலிருந்தனர். அநேக ஆண்டுகளாக புரட்டஸ்தாந்த மதத்தினர் சிறந்தசெல்வாக்குப் பெற்றிருந்தனரென்பதை இன்று அவர்களிருக்கின்ற வலைநிலையிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

[வளரும்]

---

### 25-வது ஆண்டின் நினைவுமலர்

பேசாலை வாசியும், ஊர்காவற்றுறைக்கன்னியர் மடத்தில் கல்வி கற்பித்து வருகையில் கடவுளரின் கமலபதம் சென்றவருமான சிஸ்டர் மேரி றீற்ரு (அ. மரியசலோமைக்குருஸ்) என்பவர் காலமாகி 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ம் நாளோடு இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இதைக்கண்ணுறும் சங். கன்னியாஸ்திரிகளே! வண. குருப்பிரசாதிகளே! ஏனைய சகோதர சகோதரிகளே! உங்கள் யாவரையும் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகத் தயவுசெய்து மன்றாடுமாறு மிகவும் பணிவாக இரந்து மன்றாடுகிறேன்.

அ. செபஸ்ரியான் குருஸ்
பேசாலை. ஆசிரியர்.

---

திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை
அவர்களின்

### 5-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 5-2-1894. இறப்பு: 25-5-1965.

தீராத கவலையினால்
நொந்தோம் ஐயா
செந்தீயின் புழுப்போலத்
துடித்தோம் ஐயா
ஆறாத அன்புடைய
முகத்தை எண்ணி
ஆறாக நீர் சொரிந்தோம்
துணையை நீத்தோம்
ஐந்தாண்டு சக்கரமாய்
பறந்த போதும்
இதயத்தில் ஒரு கணமும்
மறந்தோம் அல்லோம்
பேராளன் நல்லிறைவன்
துணையால் அந்த
பேருலகில் நீரினிது
வாழுவிரே.

நித்திய இளைப்பாற்றியை இறைவன் இவருக்கு அளிப்பாராக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக. இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக 25-5-1970. திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்கோவிலிலும், மருதமடுவிலும், 27-5-1970 புதன்கிழமை காலை கொட்டாஞ்சேனை சந்தலூசியா தேவாலயத்திலும் பாட்டுப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் வருந்தும் நேச மனைவி அந்தோனியாப்பிள்ளையும் சேயர்களும்.

79. சூரேட்,
கொட்டாஞ்சேனை.

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

பாலகயேசுவின் இரக்கத்தினாலும், தேவதாயாரின் மன்றாட்டினாலும், புனித சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். மிக்கேல் சம்மனசானவர் இவர்களின் உதவியாலும் என் குழந்தையின் பிணி நோய் நீங்கப்பெற்றது. இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு இவர்களிடம் மன்னிப்புக் கோரிநிற்கிறேன்.

63|70. அடியாள்.

* * *

திரு இருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த செபமாலை மாதா, புனித அந்தோனியார், புனித யூதாததேயு இவர்களின் மன்றாட்டாலும் எனக்கு பூரண சுகமும், நான் கேட்டவைகளும் அனுகூலமாயிற்று நேர்த்தியின்படி பிரசுரம் பண்ணுகிறேன்.

ஓர் அடியாள்,
நொச்சிக்குளம்.

* * *

மண்கும்பான் புனித அந்தோனியாரிடம் இரந்துகேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றேன். நன்றியாகப் பிரசுரிக்கிறேன்.

ஒரு பக்தன்.

* * *

பிறேக்நகர பாலகயேசுவின் சலுகையால் யாவும் அனுகூலமாயிற்று. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஒரு பக்தன்

---

● சின்னப்ப பாப்பரசர் அண்மையிலே றோமைநகரின் சுற்றாடலில் தொழிலாளர் வகுப்பினர் சஞ்சரிக்கும் ஒரு பகுதிக்கு விஜயஞ்செய்து அங்குள்ள மக்களுடன் கலந்து மகிழ்ந்து கைகொடுத்து உரையாடி அங்கே அசிலியா எனும் தாய் வைத்திருந்த இரட்டைக் குழந்தைகளைக் கையிலேந்தி அன்பு பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒலிவக் குன்றிலிருந்து....

**"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவி பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" (மத். 28 : 39).**

அன்று ஒலிவமலைக் குன்றின் உச்சியில் ஒலித்தது இக்குரல். சுமார் 500பேர் கூடியிருக்க அவர்கள்முன் கூறினார் இறையவன் கிறீஸ்து. 500 பேருக்கு மட்டுமல்ல, அகில மனைத்திற்குமே கூறினார் இப்படி. எனவே அப்போஸ்தலர்களின், ஆயர்களின், குருக்களின், ஏன் ஒவ்வொரு கிறீஸ்தவனின் மீதும் கூறப்பட்டது இக்கூற்று. ஆதலின் மறைபரப்புவது எமது தலையாய கடன். இல்லை அன்புச் செயல் — திருப்பணி.

இறைவன் மனிதனுக்களித்த அருட்கொடைகளில்ஒன்று மனச்சுதந்திரம்.

மனிதன் மனச்சுதந்திரத்தால், அலகையின் சூழ்ச்சியால், கீழ்ப்படியாமையால், அகங்காரத்தால் கெட்டழிந்தான்; அலகையின் அடிமையானன்.

ஆன்மாவைத் தேடும்இறைவன் மனிதனைமீட்க, மனித வடிவில், மண்ணுலகில், ஏழ்மையிலும், தாழ்மையிலும், பொறுமையிலும், தாழ்ச்சியிலும் வந்தார். பின்பு (2-ம் வருகையில்) மகிமையிலும், வல்லமையிலும், ஒலியிலும், ஒளியிலும் வருவார்.

இவ்வருகை சிறக்கவேண்டுமாயின், கிறிஸ்துவின் மீட்புப் பணி வீணுக்காதிருக்கவேண்டுமாயின் திருச்சபை தன் அலுவலைச் செவ்வனே செய்திருக்கவேண்டும். இப்பணியைச் செய்யாதுவிட்டால், அண்ணல் பெற்றுத்தந்த மீட்பை ஒருவிதத்தில் வீணுக்குகின்றோம் என்றே கூறவேண்டும்.

எனவே, அன்று குன்றிலிருந்து ஒலித்த கட்டளையை நிறைவேற்றும் ஸ்தாபனம் திருச்சபை. அவர் பணியைத் தொடர்ந்து ஆற்றும் ஸ்தாபனம் திருச்சபை.

"என்னையன்றி தந்தையிடம் செல்பவன் ஒருவனுமில்லை" என்றார் கிறீஸ்து. ஆம், மீட்பின் அருட்சாதனமான, கிறீஸ்துவின் தொடர்ச்சியான திருச்சபையால்தான் நாம் பிதாவிடம்செல்லவேண்டும். இது கிறீஸ்துவின் திருவுளம். பிதாவின் விருப்பமும இதுவே. இதற்காகவே திருச்சபை செயற்பட்டு வருகிறது.

கிறீஸ்துவின் மீட்பு எல்லா ஆன்மாக்களுக்கும் சேர, இறைவனின் நற்செய்தி எல்லா ஆன்மாவின் இதயத்திலும் விதைக்கப்பட வேண்டும். அவ்விதை (நற்செய்தி) முளைத்து, வளர்ந்து உறுதி பெற வேண்டும், விசுவாசத்தில் திடம்பெற வேண்டும். பின் கிறீஸ்துவின் அருட்சாதனங்களைப் பெற்று, கிறீஸ்துவில், இறைஅன்பில் ஐக்கியப்படவேண்டும். இவ்வுலகவாழ்வின் நோக்கமும் இதுவே. மறுவுலக வாழ்வின் ஆயத்த காலம் இவ்வுலகம். எனவே, இவ்வுலகில் இப்பலனை (கிறீஸ்துவில் ஐக்கியமாவதை)ப் பெறுதோர் வாழ்வின் பலனை அடையத் தவறியோராவர். ஒவ்வொரு ஆன்மாவும் இப்பலனை அடையத் திருச்சபை செயல்பட வேண்டும். செயல்பட்டும் வருகிறது. கடைசி ஆன்மா இவ்வுலகில் இருக்கும்வரை இப்பணியைத் திருச்சபை செய்துவரவேண்டும்.

"ஆண்டவர் போதித்த— அனைத்தும் ஜெருசலேம் தொடங்கி உலகின் கடைசி எல்லைவரை பறை சாற்றப்பட்டுப் பரப்பப்பட வேண்டும்" என்று விரும்புகின்றது 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம்.

மலையில் தோன்றிய மறைபரப்புப்பணியை மங்காமல் மறையாமல் மனுக்குலத்திற்கு ஆற்றிவரும் திருச்சபையைப் பழுதின்றி, பயமின்றிப் பாதுகாத்துவருகின்ருர் பரம்பொருள் பரிசுத்தஆவி. பரம அன்பைப் பரப்பும் பரிசுத்த ஆவி இறை உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்தி, மக்களை இறை அரசுக்கு வழி நடத்திச் செல்கின்ருர்.

---

## அரபு மக்களுக்கு ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

**தைத் தெரிவித்திருக்கிருர். "இத்துயரசெய்தி யாவருக்கும் நற்சிந்தனையூட்டி, மிருகத்தன்மையான இப்போரை நிறுத்தி நீதியான சமாதானம் நிறுவவழிவகுக்க வேண்டுமென தேவனைப் பிரார்த்திக்கின்றேன்" எனப் பரிசுத்த தந்தை தன்செய்தியில் கூறியிருந்தார்.**

---

### நீ விசுவசித்தால்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துகொள்ளப்பட்டோரின் தந்தையாக அழைக்கப் பட்டார்.

மனிதரின் சுதந்திர வாழ்வு, இறைவனின் அருள் மொழிகளை ஏற்று, அவற்றை விசுவசித்து, அதன்படி நடப்பதில் தான் தங்கியிருக்கிறது. இவ் விசுவாசம் என்னும் கொடை பரலோகத்திலிருந்து தான் மனிதருக்கு அளிக்கப்பட வேண்டும். விசுவாசத்தின் பெறுபேறு. சருவேசுரனுடைய மகிமையைக் கண்டு மகிழச் செய்யும். இன்று உலகு கிறிஸ்துவை அறியாதிருப்பதும், அறிந்தும் சிநேகப்பற்றற்று, வெதுவெதுப்பாய் இருப்பதற்கும் மூல காரணம் கிறிஸ்தவர்களின் விசுவாசக் குறைவே ஆகும். கிறிஸ்தவர்கள் யாவரும் கிறிஸ்துவின் மட்டில் பூரண விசுவாசம் கொண்டிருந்தால், உலகின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் கிறிஸ்துவை அறிந்திருப்பார்களே. நம் அன்பின் தெய்வம் உயிர்த்தெழும்பிய போது, தமது அப்போஸ்தலருக்கு முதல் வாக்காய் என்ன போதித்தார். "உலகெங்கும் போய் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் ஞானஸ்நானம் கொடுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சிக்கப்படுவான்" என்பதே.

---

# மனுக்குலத்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் பிறகே சென்று, அவரது பாடுகள் வேதனைகள் ஒவ்வொன்றிலும் அவருடன் ஒன்றுபட்டு, அவருக்குத் தென்பு கூறுவதுபோல் பின் சென்று, கல்வாரிமலையில், அவரைச் சிலுவையில் அறைந்தபோதும் அக்கோரக் காட்சியை அவ தன் கண்ணுல் கண்டு சகித்தா என்ருல், அத்தாயின் வீரத்துவத்தை, இரட்சிப்பின் தாகத்தை என்னென்பது? அவ்விடத்தில் முகத்தைப் பொத்தி, மண்டையை நிலத்தில் மோதி, அல்லது தரையில் விழுந்து புரண்டாவா? பல வார்த்தைகளைச் சொல்லி அழுது அரற்றினுவா? இல்லையே! அமைதியாக சிலுவையடியில் நின்று அன்பின் இரட்சகர் திருமகனுடன் மனுக்குலத்தின் பாவப்பரிகாரப் பலி ஒப்புக்கொடுத்தாவே! பரம பிதாவுக்குப் பலி ஒப்புக்கொடுத்த முதல் மனுப்பிறவி நம் தேவ அன்னையல்லவா? தான் வயிற்றில் சுமந்து, தானே வளர்த்துவந்த செம்மறியை இறைவனுக்கு பிராயச்சித்தப் பலியாக, சகல மனிதர் போராலும் கல்வாரிமலையில் பலியாகச் சம்மதித்தா, ஒத்துழைத்தா என்ருல் அவவின் தியாகத்தை எப்படி வர்ணிப்பது. பரி. லூக். 2-ம் அதி. 33-ம் வசனத்தில் கூறப்பட்டபடி, "உம்முடைய ஆத்துமத்தையும் ஓர் வாள் ஊடுருவும்" "இதனுலே அனேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படும்படியாகும்" என்று பரிசுத்த சிமியோன் தேவாலயத்தில் நம் தேவ அன்னைக்குக் கூறியதும் இங்கு சிந்திக்கத்தக்க விஷயமே! இவ்வாறு கவலையின் வாளினுல் ஊடுருவப்பட்ட நம் தாய் தெய்வசித்தத்துக்குப் பணிந்து, பலி ஒப்புக்கொடுத்து கிறீஸ்துவின் சகோதராகிய நமக்குத் தாயானுள்.

இத்துடன் நம் அன்னையின் பங்குமுடிந்து விட்டதா? நம் மீட்பர் உயிர்த்தெழுந்து தமது அப்போஸ்தலருக்குத் தரிசனையான போதும் அங்கு சமூகமளித்ததுடன் நில்லாது, பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரி. ஆவியானவரின் வருகையின் போதும், அப்போஸ்தலருடன் தானும் கூட இருந்து திருச்சபையின் ஆரம்பத்திலும் பங்காளியானு. ஆகவே, கிறீஸ்துவைத் தேவனுகக் கொள்ளும் நமக்கு, அவரின் தாய் நமக்கும் தேவதாய் அல்லவா? கிறீஸ்துவின்மட்டில், கிறீஸ்துவின் சேவையில் பூரண உரிமையுடைய இப்புனிதவதியை, இப்பரிசுத்த அன்னையை நாம் ஏன் முன்மாதிரியாகப் பாவிக்கக் கூடாது? அவவை நம்முடன் அழைத்து யேசுநாதருக்கு சேவை செய்வதில் ஏன் உதவிகேட்கக் கூடாது? அருள் நிறைந்த மரியாயே வாழ்க என்று ஏன் வாழ்த்தக் கூடாது?

[illegible]

---

# திரீத்துவப் பெருமை

[ செ. மொத்தம் போல் — வங்காலை ]

அருபரத் தொருவன் அவனியில் வந்தே
அருளிய குருபரன் பெருமை
அரியநற் செய்தி அறைவது முண்மை
அருள்நிறை அமலிதன் தனிமை
வருபரதூதன் மங்களச் சொல்லும்
மதித்திடும் நதிக்கரை முழுக்கும்
மனுமகன் பெறவே மணிமொழி புறவும்
மலர்ந்ததும் வெளிப்படை யன்ரே
திருமறை தன்னிற் திருமொழி பகருந்
திருவருட் சாதனச் சடங்கில்
திருவருட் தந்தை சேயுடனுவி
திகழ்பெயர் உரைப்பதும் வேதத்
திருமறைச் செல்வர் தெளிவுற விளக்கும்
திரீத்துவ பரம்பொருட் தன்மை
சிலைத்தட வரையிற் கொலைப்படச் சுமந்த
தேவனின் பிறப்பருட் பலனே.

❋

தத்துவப் பரம சருவமு மாளும்
சத்திய திரீத்துவக் கீர்த்தி
தங்களுள் நினைந்து தருக்கமும் புரிந்து
தலைக்கெறு வடங்கியவ ருண்டு
வித்துவப் புலமை மிகுபுகழ் ஆயர்
வித்தகர் அகஸ்தினு வென்பார்
விஞ்சிய நினைவை விண்ணவர் பாலன்
விரிகடற் புனலினைக் குழியில்
முத்துறை சிப்பி மொண்டதை நிரப்பி
மூவொரு இறைவனைத் துலக்கி
முழுப்பொரு ளுணர்த்தி மோனமே மறைய
முனிவரன் திகைத்தது மறிவோம்
புத்தியிற் சித்தம் பொதிந்திடத் தினமும்
புகழ்திரீத் துவச்செப மோதிப்
போற்றுவம் வாழ்விற் புத்துயிர் பெறுவோம்
பொருதிடு முலகினிற் ருனே.

❋

விண்டினில் மிதித்து விண்டினி லேறி
விண்ணவர் தந்தையின் வலத்தில்
விளங்கிடச் சிலுவை விருதுட னேகும்
விமலனுர் இறைபுகழ் யேசு
கண்ணிரு மணியாங் கனிவுறு சீடர்
கணித்திட மகத்துவ மான
கருதரும் மொழியாங் கடந்துள அப்பன்
கன்னியின் மகனுயி ராவி
பண்புடன் பொதிந்த பரம்பொருள் நாமம்
பகருமென் றுரைத்தநற் செபத்தை
பக்திகொண் டிருத்திப் பசாசினைத் துரத்திப்
பலநவம் புரிந்தருள் சிறக்க
எண்ணிய மறையில் இறைவனு மிருக்க
என்றுமே திரீத்துவப் பெருமை
ஏத்திட நாமும் இருதயத் தேற்றி
இறைவழி நடப்பதுங் கடனே.

---


## லூக்காஸ் சுவிசேஷக் கைத்துணை

என்னும் நூல்

**வெளிவந்துள்ளது**

G. C. E. (Ord. Lev) மாணவர்களுக்கு
**மிக உபயோகமானது**
**விலை ரூபா 1.00.**

கிடைக்குமிடம் :—

புனித சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

* * *

கத்தோலிக்க நடுநிலையம்,
அதி மேற்றிராணியார் இல்லம்.
கொழும்பு 8.

* * *

திருக்குடும்ப ஆங்கிலப்பாடசாலை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### ஆனி — 1970

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 2 | செவ்வாய் | ,, | [ப] |
| 3 | புதன் | ,, | [ப] |
| 4 | வியாழன் | ,, | [ப] |
| 5 | வெள்ளி | யேசுவின் திரு இருதயம் | [வெ] |
| 6 | சனி | தினப் பூசை | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# வாழ்க பல்லாண்டு!

எங்கள் ஞானத்தந்தையாகிய ஆரும் சின்னப்பரின் குருத்துவ பொன்விழாவை அக்களிப்புடன் கொண்டாடும் கத்தோலிக்க மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்பவர்கள். அவர்களிற் பெரும்பாலோர் பாப்பரசரை நேரிற் கண்டவர்களல்ல அப்படியிருந்தும் அவரிடத்தில் இத்தகைய அன்பும் விசுவாசமும் பூண்டு தமது பிரமாணிக்கத்தை வெளிக்காட்டுகிறார்களென்றால் அதற்கு இரு காரணங்கள் இருக்கவேண்டும். ஒன்று பாப்பரசர் பதவிக்கு அவர்கள் காட்டும் மதிப்பு —மற்றது ஆரும் சின்னப்பரின்மீது தனிப்பட்டவிதமாக அவர்கள் கொண்டிருக்கும் அன்பு.

பாப்பு பதவியோ உலகிலேயே உன்னதமானது, ஏகாந்தமானது; இறைவனின் கையாலேயே அளிக்கப்படுவது. அதை வகிப்பவர் இறைவனுக்கு மட்டுமே கணக்குக் கொடுக்க வேண்டியவராவார். கோடிக்கணக்கான மக்களின் ஆன்மீக தலைவராக மட்டுமல்லாது, பூவுலகிற்கு வழிகாட்டும் இறைவனின் பிரதிநிதியாகவும் விளங்கும் தெய்வமகனுவார்.

ஆரும் சின்னப்பர் என்ற உத்தியோக பூர்வமான பெயரை விடுத்து பாப்பு மொண்டினி என அன்புடன் மக்களால் குறிப்பிடப்படும் இவர் அதிகாரத்தினுல் அல்ல, அன்பினுலேயே ஆளவந்தவர். இன்றைய சூழ்நிலையில் பலசமயங்களில் இடித்துரைத்தும் எச்சரித்தும் தவருன கொள்கைகளைக் கடிய எண்ணிய அவர் தண்டனையை ஒருபோதும் கையாண்டதில்லை. இதன் பயனுக திருச்சபையில் என்றுமில்லாத அளவு சுதந்திரம் நிலவி வருகின்றது. ஆனுல், தவருன கொள்கைகளை கடிவதில் அவர் மிகக் கண்டிப்பாகவே இருந்திருக்கிறார். எவ்வளவு பேர் தம்மை எதிர்த்தபோதிலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சத்தியத்தைப் பேணிப் பாதுகாப்பதில் சற்றும் பின்வாங்காத மனஉறுதி படைத்தவர். ஆனுல், அவர் பழைமையில் சிறைப்பட்டவரும் அல்ல, இன்றைய பிரச்சினைகளை நன்குணர்ந்த இருபதாம் நூற்றுண்டு மனிதரேதான். எந்தப் பாப்புவையும் பின்பற்ருது தமக்கென்றே ஒரு வழியை வகுத்துக் கொண்டவரெனினும் கடைசி மூன்று பாப்பரசர்களின் நற்பண்புகள் அவரிடம் திரண்டு உருவெடுத்ததைக் காண்கிறோம். பதினேராம் பத்திநாதரின் சுறுசுறுப்பை மட்டுமன்றி அவரது மனத்திடனையும், பன்னிரண்டாம் பத்திநாதரின் உருவ ஒற்றுமையை மட்டுமன்றி அவரது கூர்மையான புத்தியையும், அருளப்பரின் புதுமைக் கருத்துகளை மட்டுமன்றி அவரது இனிய உள்ளத்தையும் தமதாக்கிக் கொண்டவர். எத்தகைய சிறியோரையும் அலட்சியம் செய்தவரல்ல. ஏழைகள், தொழிலாளிகள், குழந்தைகள், நோயாளிகள் அனைவரது நலனிலும் முன்னின்று அக்கறை காட்டியவர், உலக சமாதானத்துக்காக ஓயாதுழைத்து வருபவர்.

இத்தகைய அருஞ்செயல்களை ஆற்றிவரும் எம் ஞானப் பிதாவுக்கு தேவைப்படுவது ஒன்று உண்டென்றால் அது எமது செபமாகும். எமது விசுவாசமும் பிரமாணிக்கமும் அவருக்கு என்றும் உண்டு. ஆனுல், அதே பிரமாணிக்கத்தை அவர் எங்கும் காண வேண்டுமென செபம் செய்து வருவோமாக. இத்தனை ஆண்டுகள் அவருக்கு ஆன்ம சரீர நலன்களை அருளி பாதுகாத்து வந்ததற்காக இறைவனுக்கு நன்றிகூறுவதுடன், அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து திருச்சபை என்னும் படகை மெய்ந்நெறியிற் செலுத்திவர அவருக்கு அதே நலன்களை எதிர்காலத்திலும் அருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# "நீ விசுவசித்தால் சர்வேசுரனுடைய மகிமையைக் காண்பாய்"

(பரி. அரு. 11-ம் அதி. 40-ம் வச.)

நம் அன்பின் இரட்சகர் லாசருவின் மரணத்தை அறிந்து பெத்தானியா வந்த போது, லாசருவின் சகோதரி மார்த்தம்மாளுக்கு இந்த மறுமொழியைக் கூறினர். "ஆண்டவரே, நீர் இங்கு இருந்திருந்தால், என் சகோதரன் மரித்திருக்க மாட்டான்" என்று விசுவாச உச்சாரணம் பண்ணிய மார்த்தம்மாளை யேசுநாதர் படிப்படியாக, தமது விசுவாசத்தினுல் ஏற்படக்கூடிய நித்திய ஜீவிய பாதைக்கு வழிப்படுத்தினுர். "உயிரும் உத்தானமும் நானே. என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான்" என்ருர். அப்போது அங்கு நின்ரேர் சகலர் முன்பும், மார்த்தம்மாள் (பரி. அரு. 11—ம் அதி. 27—ம் வச.), "ஆம், ஆண்டவரே! நீர் கிறிஸ்துநாதரென்றும், இவ்வுலகுக்கு எழுந்தருளி வந்த சீவிய கடவுளின் குமாரன் என்றும், விசுவசிக்கிறேன்" என்ருள். இதை யார் அவளுக்குக் கற்பித்தது. அவளது அன்பும், திடமான நம்பிக்கையும் அவரைப் பிதாவின் குமாரன் என்று அறிக்கையிடச் செய்தது. "செத்து நாலுநாளாயிற்றே! நாறுமே!" என்றவள் தனது விசுவாச வெளிச்சத்தை அதிகப்படுத்தி உறுதிகொண்டதால், சருவேசுரனுடைய மகிமையைக் கண்டாள்; லாசருவை உயிருள்ளமனிதனுக அழைத்துச் சென்ருள்.

அடுத்தபடியாக, கிறிஸ்துநாதரால் சொஸ்தமாக்கப்பட்ட பிறவிக் குருடனைக் கவனிப்போம். இறைமகனையோ, இறைவனுல் படைக்கப்பட்ட எந்தப் பொருளையோ காணுதிருந்து அவரால் சொஸ்தமாக்கப்பட்டு, பார்வையடைந்த பின் அவரைக் கண்டு, அவரது வாக்குகளைக் கேட்டு, அவரை விசுவசிக்கிருன். தன்னைத் திரும்பத் திரும்ப வினவும் பரிசேயருக்கு, தான் பெற்றுக்கொண்ட விசுவாச ஒளியினுல், இதயத்தில் ஆழ்ந்து சிந்தித்துக்கூறும் வார்த்தைகள் எவ்வளவு கருத்தமைந்தன என்பதை அவதானிப்போம் (பரி. அரு. 9—ம் அதி. 30—33—ம் வச.). அதற்கு அந்த மனிதன் மறுமொழியாக, அவர் என் கண்களைத் திறந்திருக்க, அவர் எவ்விடத்தாரென்று நீங்கள் அறியாதிருக்கிறீர்கள் என்பதிலே சந்தேகமற ஒரு ஆச்சரியம் இருக்கிறது! சருவேசுரன் பாவிகளுக்குச் செவிகொடுக்கிறதில்லை என்று அறிவோம். ஆயின் ஒருவன் தேவபக்தனுயிருந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றினுல், அவனுடைய மன்ருட்டைக் கேட்டருளுகிருர், பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று, உலகில் ஆதிமுதற்கொண்டு, கேள்விப்பட்டதில்லையே! இவர் சருவேசுரனிடமிருந்து வராதிருந்தால், ஒன்றும் செய்யமாட்டாரே! என்ருன். என்ன அறிவுள்ள, ஞானமுள்ள விடை! படிப்பறிவற்ற இக்குருடனின் உள்ளத்தில் விசுவாசம் நிரம்பிய ஜீவனுள்ள வார்த்தைகள் எப்படி உருவாகின? அவனது சரீரக் கண்களுடன் ஞானக் கண்களும் திறக்கப்பட்டு சாட்சி பகர முன்நிற்கிருன். அதனுல் பரிசேயர் அவனைப் பகிடி பண்ணி, நீ பாவத்தில் பிறந்தவன் என்று கூறி, அவனைப் புறம்பே தள்ளி நிந்திக்கின்றனர். இவ்வாறு அவன் நிந்திக்கப்பட்டதை அறிந்த நம் அன்பின் இரட்சகர், அவனது இதயத்தில் பெற்றுக் கொண்ட விசுவாச ஒளியை, மேலும், பிரகாசிக்கப்பண்ண (பரி. அரு. 9—ம் அதி. 35—38), "நீ சருவேசுரனுடைய சுதன் பேரில் விசுவாசமாய் இருக்கிருயோ? என்று அவனைக் கேட்க, அவன் பிரதியுத்தாரமாக, "ஆண்டவரே, அவர்பேரில் விசுவாசமாய் இருக்கும்படி அவர் யார்?" என்ருன். அதற்கு

— நாதன் —

யேசுநாதர், "நீ அவரைக் கண்டிருக்கிருய். உன்னேடு பேசுகிறவரும் அவர்தாமே" என்ருர். உடனே அவன் ஆண்டவரே என்று சொல்லி, தீர்க்கதண்டனுக விழுந்து, ஆராதித்தான், அவனது விசுவாசம் அன்பின் தெய்வம் கிறிஸ்துவைக் கண்டடைய வைத்தது. இக்குருடனுகிய படிப்பறிவற்ற பாமரனுக்குக் கிடைத்த பாக்கியம் அப்பரிசேயருக்குக் கிடைக்கவில்லை. கண்களிருந்தும் குருடாயிருந்தனர். என்ன பரிதாபம், இன்றும் நம் மத்தியில் எத்தனையோ விழிகண் குருடர் இருக்கின்றனர். இதன் மூலகாரணம் விசுவாசக் குறைவேயாகும். ஒருவன் இறைவனில் வைக்கும் விசுவாசப் பற்றே தொடர்ந்து அவனது கிரிகைகளில், குடும்பத்தில், சமூகத்தில், தன்னில் செயல்பட்டு, வெற்றியைக் கண்டடைய வைக்கிறது. அத்துடன் விண்ணரசின் சீரிய பாதையில் இட்டுச் சென்று, மனித புத்திக்கெட்டாத தெய்வ அருளை விளங்க வைத்து, அதிசயிக்கத்தக்க அரும்பெரும் செயல்களைப் புரிகிறது.

பிதாப்பிதாவாகிய ஆபிரகாம், விசுவாசத்தின் கற்பாறை என்பதை யாவரும் அறிவர். அவரது விசுவாசம் அவரை நீதிமான் ஆக்கியது. தள்ளாப் பிராயத்தில் இறைவனுல் தனக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை விசுவசித்ததினுல், அவர் அநேகம் ஜாதிசனங்களுக்குத் தகப்பனுவாரென்று, நம்புகிறதற்கு அவரது விருத்தாப்பியமும், சாராளின் வயதுமுதிர்ச்சியும், தடையாய் இருந்தும் இறைவனின் வாக்கை நம்பினுர். விசுவசித்தார். அதனுல், நம் எல்லோருக்கும் பிதாவானுர். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று கூறப்பட்ட

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## குருத்துவ திருநிலைப்பாடு

இம்மாதத்தின் 17-ம் நாள் (புனித ஆவியானவர் விழாவன்று) உரோமாபுரியின் புனித இராயப்பர் தேவாலயத்தின் திறந்தவெளியரங்கில் மாலை 5 மணியளவில் அருட்திரு யோ. செல்வராஜா அடிகளார் பரி. தந்தை ஆரும் சின்னப்பர் கையால் புனித குருத்துவ திருநிலைப்பாடு பெற்ருர்.

கரவெட்டியைச் சேர்ந்த திருமதி வரப்பிரகாசம் தம்பதிகளின் முதற் புதல்வனுன இவர், திருமலை புனிதவளனுர் கல்லூரியின் பழைய மாணவராவர். திருமலை-மட்டுநகர் மறைமாநிலத்துக்குத் தன் சேவையை அர்ப்பணித்த இவர் திருமலைப் புனிதவளனுர் சிறிய குருமனைமடத்திலும், கண்டிக் குருத்துவக் கல்லூரியிலும் பூனுவிலுள்ள பாப்பரசர் குருத்துவக் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். தற்பொழுது இவர் உரோமையிலுள்ள மறைபரப்பு - குருத்துவப் பல்கலைக்கழகத்திற் பயின்று வருகின்ருர்.

புதுக்குருவின் சேவை என்றும் வளர வாழ்த்துகின்ரேம்.

வெளியாகிவிட்டது

சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவரின்
இன்னுமொரு புத்தகம்

பதுவை அந்தோனியார்

தரமான பதிப்பு — விலை ரூபா 2-25

வியாபாரிகள் தொடர்பு கொள்ளுங்கள்:

யோ. ஜூலியஸ் இராசையா,
6, சென்மேரிஸ் லேன்,
ஊர்காவற்றுறை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ வைகாசிமீ 30ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org